ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர் 6**

## தீவ்ர உபாஸனை

குரூணாம் ஸதஸத்வாபி யதுக்தம் தன்னலங்க்யேத்!
குர்வன்னாக்ஞாம் திவாராத்ரெள தாஸவன் நிவஸேத் குரெள !!

குருகீதை 2.29

குருநாதர்களால் எது சொல்லப்பட்டதோ அது நல்ல தாயினும் கெட்டதாயினும் அதைத் தாண்டக்கூடாது. இரவு பகலாய் குருவின் கட்டளையை நிறைவேற்றிக்கொண்டு குருவிடம் அடிமை போல் வசிக்க வேண்டும்.

**குரு கீலகம் – குரு ஆசரணம்**

மஹானான ஸத்குரு வாய்த்தும் இவனுக்கு ப்ரஹ்மஞானம் ஏற்படாத காரணம் இதில் விளங்குகிறது.

மாத்ரு ஸம்ரக்ஷணாபாவோ மாத்ருத்ரோகச்ச கேசவ!
மாத்ருஸந்தாபகாரித்வம் ஞானானுத்பத்தி காரணம்!!

பித்ரு த்ரோகச்ச சிஸ்ருஷா அபாவதஸ்யததைவச!
பித்ருஸந்தாபகாரித்வம் ஞானானுத்பத்தி காரணம்!!

அபக்ஷ்யபணே ச்ரத்தா ததா அபக்ஷஸ்ய பக்ஷ்ணம்!
அபக்ஷகஸ்ப்ருஷ்டி ஞானானுத்பத்தி காரணம்!!

குரோனிஷ்டாசரணம் குரோரிஷ்ட விவர்ஜனம்!
குரோஸ்சஸேவா அபகரணம் ஞானானுத்பத்தி காரணம்!!

ஆசார்ய பால புத்திஸ்ச நரபுத்திஸ்த்தைவச!
அனிஷ்டபுத்திர் பூநாத ஞானானுத்பத்தி காரணம்!!

ஆசார்யநிந்தாஸ்ரவணம் தத்பாதஸ்ய தர்சனம்!
விவாதஸ்ச ததாதேன ஞானனுத்பத்தி காரணம்!!

ஆசார்யே அனீஸ்வரக்ஞானம் உபேக்ஷா ச த்தைவச!
ததுக்த விஸ்மிருதிஸ்சாபி ஞானானுத்பத்தி காரணம்!!

## 1. ஸாதனை

உத்தமமான தத்வ சிந்தனையை உடைய ஸத்குருவாம் ஸ்ரீசிதானந்தநாதர் குருவாகக் கிடைத்த பின்பு இவருக்கு தத்வ ஞானம் அபரோக்ஷமாக ஸித்தித்தது. "ஸ்ரீஸார்" அவர்கள் பேசும் போது புதுபுதுதத்வ ரஹஸ்யங்கள் தானாக வந்து விழும். பழுத்த உபாஸனையின் பயனாகக் கிடைக்கும் இவைகளை குருநாதர் உள்ளத்திலே பதித்துக் கொண்டுவிடுவார்.
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே" என்ற திருமூலர் வாக்குக்கிணங்க வாழ்ந்தார். இவர் ஸ்ரீவித்யா சம்பந்தமான க்ரந்தங்கள் சாஸ்திரங்கள் தந்த்ரங்கள் என இவர் பரீசீலித்த, பார்த்த புத்தகங்கள் எண்ணிலடங்கா. அடியேனுக்கு தெரிந்த வரை இதில் அவைகளை குறிப்பிடுகிறேன்.

**தந்த்ரங்கள்:–** தந்த்ரராஜம், குளார்ணவம், நிர்வாணதந்த்ரம், மேருதந்த்ரம், ஸ்ரீவித்யார்ணவம், ப்ரபஞ்சஸாரஸங்கரஹம், ஞானார்ணவம். நித்யாசோடசீகார்ணவம், ருத்ரயாமளம், வாமகேஸ்வரதந்த்ரம், சாரதாதிலகம், சாக்தப்ரமோதம், கல்பசூத்ரம், நித்யோத்ஸவம் இன்னும் பல.

**புராணங்கள்:–** ராமாயணம், மஹாபாரதம், ஸ்ரீமத்பாகவதம் ஸ்ரீதேவீபாகவதம், ப்ரஹ்மாண்டபுராணம். மார்க்கண்டேயபுராணம் ஸ்காந்தம். த்ரிபுராரஹஸ்யம் முதலியன.

**வேதாந்தத்ரந்தங்கள்:–** விவேக சூடாமணி, பஞ்சதசீ சூதஸம்ஹிதை, ஸ்வானுபூதிரஸாயனம், வாஸுதேவமனனம், கைவல்ய நவநீதம். பகவத்கீதை, ஸ்ரீவித்யாகீதை. உபநிஷத் பாஷ்யங்கள் ஆகியன.

**ஸ்ரீபாஸ்காராயரின் க்ரந்தங்கள்:–** ஸௌபாக்யபாஸ்கரம், கத்யோதயம், காமகலாவிலாசம் வரிவஸ்யாரஹஸ்யம் முதலியன.

இத்தனை புத்தகங்களின் ஞானமும், தத்வதர்சியான குருவின் கூட்டுறவும், இவருக்கு அபரிமிதமான ஞானத்தை ஏற்படுத்தியது. இவர் பத்ததிப்படி பூஜை செய்யும் காலத்தில் அதில் ஒன்றி ஸ்வரூபத்யானமும் தத்வ தர்சனமும் கைவரப்பெற்று ஸகஜ ஸமாதியிலேயே பலமுறை ஆழ்ந்ததுண்டு. இந்த நவாவாண பூஜைக்காக ஸ்ரீஸார் ஆக்கிய ஸ்ரீவித்யா

ஸபர்யா பத்ததி என்ற பூஜாகல்பம் மிகவும் ப்ரஸத்திபெற்றது. இவ் விடத்தில் ஸ்ரீசக்ர ஆராதனம் பற்றி சில சொற்கள்.

## 2. ஸ்ரீசக்ர ஆராதனம்

ஸ்ரீபாசுராமர் ஆக்கிய கல்பசூத்ரம் ஸ்ரீவித்யாஸபர்யையை (உபாஸனை)ச் சொல்கிறது. இது சூத்ரப்ராயமாக இருப்பதால் அதை அப்படியே அனுஷ்டிப்பது என்பது எல்லா ஸாதகர்களாலும் முடியாததெனக்கருதிய ஸ்ரீஉமானந்தநாதர் என்ற ஸ்ரீபாஸ்கரராயரின் சிஷ்யர் பிற்காலத்தில் அதனின் தொகுப்பாக அனுஷ்டானக்ரந்தமாக– நித்யோத்ஸவம்என்ற நூலைத்தொகுத்தளித்தார். இதில் ஸ்ரீமஹாகணபதிஸபர்யை, ஸ்ரீவித்யாநித்யான்னிகம் நவாவரணபூஜை. ஷோடான்யாஸங்கள், தீக்ஷாக்ரமம், ஜபவிதி என பகுதிகள் உண்டு. பிறகு ஸ்ரீசிதானந்தர் அவர்கள் **ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததி** என்று ஒரு தொகுப்பு நூல் ஆக்கினார்கள். இது நவீன, எளிய, முக்கிய இடங்கள் எதுவும் விடப்படாத வகையில் ஆக்கப்பட்டது. இதுதான் தற்காலத்தில் பாரத தேசத்தில் பெரும்பாலான உபாஸ்க் மண்டலியினரால் பொதுவாக ஸ்ரீவித்யையின் ப்ரதான கல்பமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. வெளிநாட்டில் கூட அதாவது Canada வில் Ontario என்ற இடத்தில் உள்ள விஸ்வதர்ம ஆஸ்ரமத்தில் உள்ள பூஜையில் – ஸ்வாமி சச்சிதானந்த சரஸ்வதி என்ற பெரியவரால் பல நூற்றுக்கணக்கான சிஷ்யர்களுக்கு உபயோகமாகவும் இதே நூல் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நூலுக்கு "ஸ்ரீஸார் அவர்கள் ஒரு வாஸனாவிமர்சம் எழுதியுள்ளார்கள். இது ப்ரஹ்மவித்யாஸபர்யையே என அதில் ஸந்தேஹ விபரீதங்களற விளக்கியுள்ளார்கள். இந்த கல்பப்படி பூஜைகள் செய்து வந்த குருநாதருக்கு நாளடைவில் இது மனப்பாடமாகவே ஆகிவிட்டது. எனவேதான் ஸ்வரூபத்யானம் கூடி உள்ளம் ஒரு நிலைப்படத்துவங்கி விடுகிறது. மிக யதார்த்தமாக அனாயாஸமாக பூஜை, ஹோமங்கள் செய்வார்கள். ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்யும் காலத்தில் நாமாவளியை தொடங்கும் போதே ராகத்துடன் ஆரம்பித்து விடுவார்கள் கணீரென்ற குரலில் இவர் அர்ச்சனை செய்யும் போது அருகிலுள்ள அத்தனை பேரும் தங்கள் தங்கள் செயலை விட்டு மௌனமாகி இக்குரலில் ஐக்யமாகவிடுவார்கள். "ஸ்ரீபாஸ்கராயர் போன்று ஸ்ரீவித்யையை உபாஸித்தல் அரிது" என்று இவர் கூறுவார்கள். ஆனால் இவரது உபாஸானை அவரைப் போன்றதுதான் என்று கூறலாம்.

இவர் பூஜையின்போது இயற்றிய **"ஸ்ரீவித்யாகத்யம்"** நவாவரண பூஜையின் தொகுப்பாவும், இவரது கவிதாப்புலமைக்கு சான்றாகவும் இன்றும் விளங்குகிறது. இவர்கள் இயற்றிய பல்வேறு விதமான கரந்தங்கள் ஸ்லோகங்கள் பற்றி பகுதி 2ல் விரிவாகக் காணலாம்.

## 3. ஸ்ரீசிதானந்தரின் அறுபதாண்டு

1942ம் ஆண்டு நவம்பர் ஸ்ரீசிதானந்த நூதருக்கு அறுபதாண்டு பூர்த்தி வைபவம் காஞ்சி ஸ்ரீஆசார்யாள் அபிப்ராயப்படி காஞ்சிபுரத்தில் ஏற்பாடாகி நடக்க இருந்தது. அதுசமயம் குருநாதரும் Evocuvation காரணமாக சென்னையை விட்டு குடும்பத்தை காஞ்சீபுரத்தில் ராஜவீதியில் வைத்திருந்தார். இரண்டாண்டுகாலம் காஞ்சி இவரை தன்னகத்தே வைத்துக் கொண்டு தன் சிறப்பை மேலும் கூட்டிக்கொண்டது. தனது குருநாதருக்கு ஏற்பாடாகியிருந்த ஷஷ்டியப்தபூர்த்தி விழாவை இவர் தனது ஞானவழியில் சாஸ்திரஅறிவால் – மேலும் சிறப்பற செய்தார்கள். ஸ்ரீமடத்திலிருந்து அவருக்கு வைபவங்கள் நடைபெறும் மண்டபம் வரை உபாஸகர்கள், பக்தர்கள் ஸ்திரீகள் ஆகியோர் லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்து கொண்டு உடன்வர குருநாதர் "ஸ்ரீசக்ர கொடி" பிடித்துக் கொண்டு மண்டபம் அடைந்து ஸ்ரீசிதானந்தநாதருக்கு மலர்கிரீடம் அணிவித்து தன் குருநாதருக்கு ஞான வழியில் சிறப்பு மரியாதை செய்தார்கள். இந்த வைபவம் நடைபெற்ற காலத்திற்கு முன்பிருந்தே ஸ்ரீகாஞ்சி ஆசாரியாள் ஆக்ஞைப்படி "ஸ்ரீஸார்" அவர்கள் பிரதி பௌர்ணமி தினத்திலும் ஸ்ரீகாமாக்ஷி ஸந்நிதியில் நவாவாரண பூஜை செய்துவந்தார்கள் "ஸ்ரீஸார்" அவர்களிடம் தீக்ஷை செய்துகொண்டவர்கள் காஞ்சிபுரத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீராஜமார்த்தாண்டசாஸ்திரிகள் ஸ்ரீகாமகோடி சாஸ்திரிகள் ஆவார்கள் (" ஸ்ரீஸார்" அவர்களின் ஷஷ்டியப்தபூர்த்தி விழா பற்றிய செய்திகளைக் கூறியவர்கள் மேற்கண்ட ஸ்ரீராஜமார்த்தாண்டசாஸ்திரிகள் அவர்களே!)

## 4. ஜகத்குருவும் ஸத்குருவும்

காஞ்சி ஸ்ரீஆசாரியாள் ஏற்பாட்டின்படி ஆண்டு தோறும் நடத்தப் பட்டு வருகிற ஆகம வேத சில்ப சாஸ்திர ஸதஸ் 1962ம் ஆண்டு முதன்முதலாக இளையாத்தங் குடியில் நடைபெற்றது. பிறகு சென்னை காஞ்சிபுரம் என பல இடங்களில் தொடர்ந்து நடந்தது. இதில் 1963–1964 ஆண்டுகளில் குருநாதரும் கலந்து கொண்டார்கள். "ஷண்மத மகாநாடு" நடைபெற்ற தினத்தில் "சாக்தம்" பற்றி இவர்கள் உரை நிகழ்ந்தது. இதில் சிறப்பு அம்சம்–

ஸ்ரீஆசார்யாளின் அன்புக்கு இன்னும் மிக அருகில் நெருக்கும் விதமாக இவர்கள் ஆற்றிய உரைதான்.

பாஞ்சராத்ர ஆகமங்களின் பிரார்த்தனை ஸ்லோகம்–

"காதி ஹரீமந்த வித்யாம் ஸ்ம்ப்ராப்ய பரதேவதாயா:

கலௌ வேங்கடேச நாமாக்ய பாதிதாம்ஹ்ருதயே பஜே"

இதனால் சக்திதத்வத்தின் மேலான தன்மையை நிலைநாட்டினார்கள். இதன் பொருளை மிகவிரிவாக ஒருநாள் ரேணுவிடம் கூறினார்கள். விரிக்கின் பெருகும் என விடப்பட்டது.

ஜகத்குருவின் நட்பின் சான்றாகவும் உபாஸகதர்மத்தை நிலைநாட்டுமுகமாகவும் நடந்த ஒரு நிகழ்ச்சி இது அப்போது குருநாதர் தங்கச்சாலை தெரு 313 No. இல்லத்தில் வசித்து வந்த நேரம் ஒருநாள் மாலை ஒருவர் இவரை பார்க்க வந்தார் வந்தவரை உபசரித்து விசாரித்தார் அவர் தன்னுடைய பூர்வோத்தரத்தைக் கூறிவிட்டு மேலும் கூறினார்:–

"எனக்கு ஸ்ரீவித்யா பஞ்சதசாக்ஷரி மந்த்ரத்தை தங்களிடம் உபதேசம் செய்துகொள்ளும்படி என்னை காஞ்சி ஆசார்யாள் தான் தங்களிடம் அனுப்பினார்கள் நான் சொன்னேன் என்று சொல். ஸ்ரீஸ்வாமி சாஸ்திரிகள் உபதேசம் செய்வார்" என்றார். இதிலிருந்து இவர் காஞ்சியிலிருந்து வருகிறார் என்பதும் பரமாசார்யாளுக்கு பரிச்சயமானவர் என்பதும் இவருக்கு புரிந்துவிட்டது."என்ன சொன்னார் மறுபடியும் சொல்லும்" என்று குருநாதர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமுறையும் அதனைக்கூறி **"நான் சொன்னேன் என்று சொல்**" என்ற வாக்யத்தில் சற்று ஒரு அழுத்தம் கொடுத்துக் கூறினார் இதைக் கேட்டவுடன் குருநாதர் கூறினார்:– "ஸ்வாமி! நீங்கள் திரும்பி செல்லலாம் அவரிடமே போய் நான் முடியாது என்று கூறிவிட்டதாக கூறும்! ம் போய்விடுங்கள்!" என்று கடுமையாகவே கூறிவிட்டார்கள். இந்த பதிலை எதிர்பார்க்காததால் அவர் சற்று மலைத்து தயங்கி, உடன் திரும்பி சென்றுவிட்டார் பிறகு காஞ்சிக்கே சென்று ஸ்ரீஆசார்யாளைப் பார்த்து நடந்ததைக்கூறினார்.

ஸ்ரீபெரியவாள் அனுப்பியதாகக்கூறியும் அவர் எனக்கு உபதேசம் செய்யவில்லை. தங்கள் சொல்லையும் மீறிவிட்டார் என்று இவர் மீது புகாராகக் கூறியிருக்கிறார். இந்த கூற்றைக்கேட்ட ஸ்ரீஆசார்யாள் அவரிடமே தர்மங்களை விவரித்து பொறுமையாக அவருக்கு குருதத்வம், உபாஸகதர்மம், பெரியோர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமை, என்றபடி பல விஷயங்களை போதித்து திரும்பவும் ஸ்ரீஸ்வாமி சாஸ்திரிகளிடமே செல்லவும், "உன்னுடைய க்ஷேமத்துக்கு நீ உபதேசம்

செய்து கொள்கிறாய். இது உனக்கும் உபதேசம் செய்பவருக்கும் உள்ள ஆன்மீகத்தொடர்பு. இதில் எனக்கு ரெக்கமண்ட் செய்ய ஏதுமில்லை. ஏதோ நீ ஸ்ரீவித்யா மந்த்ரஉபதேசம் செய்து கொள்ள விரும்பினாய். உனக்கு நல்லதொரு ஸத்குரு அமையவேணுமே என்றுதான் அவரிடம் அனுப்பினேன். நீ அவரிடம் ஆணவமாக, என் சிபாரிசால் அவர் உனக்கு உபதேசம் செய்துவிடுவார் என எண்ணி கூறியுள்ளாய். அவர் ஒரு ஸ்வதந்தரர். ஸ்ரீவித்யா வாசஸ்பதி, மந்த்ரசாஸ்த்ரம் நன்கறிந்தவர். அவரிடத்தில் சிபாரிசால் யாரும் சிஷ்யனாக முடியாது. உனக்கு நல்ல குரு அதோ! பார் என்று காட்டினேன். அவ்வளவுதான் எனவே திரும்ப சென்று பணிவுடன் கேட்டுப் பெற்றுக்கொள்' என்று கூறி திரும்ப அனுப்பிவிட்டார்கள். மறுபடி அவர் இவர்களிடம் வந்தார். அதன்பின் மிக மிக பணிவு. தன்னடக்கம். இவைகளை கண்டபின்பு குருநாதரும் அவருக்கு காலக்ரமத்தில் விதிப்படி எல்லம் செய்திருக்கிறார்கள். இந்நிகழ்ச்சியை குருநாதரே ரேணுவினிடத்தில் கூறியவையாகும்.

## 5. ஸ்ரீவித்யா உபாஸக தர்மங்கள்

ஸ்ரீவித்யா உபாஸனை ஆத்ம ஸாக்ஷாத் காரமாகிய மோக்ஷம் ஒன்றையே லக்ஷியமாகக் கொண்டது ("மோக்ஷகஹேதுர்வித்யாது ஸ்ரீவித்யைவநஸம்சய:") என்பது பெரியோர்களாலும், சாஸ்த்ரங்களாலும் பலவகைகளிலும் எப்போதும் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு ஹேதுவாக எத்தகைய உபாஸக தர்மங்களை சரத்தையுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப்பற்றி பல்வேறு சாஸ்த்ரங்கள் ஞானார்ணவம், குலார்ணவம், யோகினிஹ்ருதயம், ஸபர்யா வாஸனை நித்யோத்ஸவம் போன்றவை விளக்கமாக கூறுகின்றன. ஆனால் தற்காலத்தில் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருப்பதை உள்ளபடி உணர்தலும், உணர்ந்ததை உள்ளபடி உரைத்தலும் அரிதாக இருபபதைக் கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் இளைய உபாஸகர்கள் தக்கபடி தர்மங்களைத் தெரிந்து நடக்கவும் எஸத் குருநாதரால் சென்ற 1975ம் வருஷம் அவர்கள் தஞ்சாவூர் ஜில்லா விடையல் கருப்பூர் கிராமத்தில் அடியேனிடம் தங்கியிருந்த காலத்தில் தொகுத்து எழுதிக் கொடுத்து அச்சிட்டு வெளியிட கூறியிருந்த ஸ்ரீவித்யா உபாஸக தர்மங்கள் அவர்களது 93வது ஜயந்தி தினமான தைகார்த்திகை தினத்தில்காஞ்சியில் வெளியிடப்பட்டது. இத்தினத்தை கோலாஹலமாக நாங்கள் காஞ்சியில் ஒன்றுகூடி கொண்டாடினோம்.

ஸ்ரீவித்யோபாஸகர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் இதில் மிக சுருக்கமாகக் கூறப்படுகிறது. முதலில்–

## பொதுவானவை

1 ஸத்குருவிற்கு பணிவிடை செய்தல் வேண்டும். அதில் லவலேசமும் லஜ்ஜை கூடாது
2 குரு சொன்னதைச் செய்ய வேண்டும் குருவின் வாக்கில் "இது நல்லது, இது கெட்டது" என்று விசாரிக்கக்கூடாது.
3 தன் குரு பரம்பரையை கூடுமானவரை தெரிந்து வைத்திருக்க வேண்டும்
4 குருவை தரிசித்த உடனேயே அவசியம் நமஸ்கரிக்க வேண்டும்.
5 தன் குருவைப்போலவே குருவின் புத்திரர்கள். பத்னி, தீக்ஷாஜ்யேஷ்டர் களிடத்திலும் நடந்து கொள்ள வேண்டும்.
6 தன் குருவை ஸாதாரணமானவராய்ப் பார்க்காமல் பரதேவதா ரூபமாக பார்க்க வேண்டும்.
7 தன் குருவை தினமுமோ அல்லது வாரம் ஒரு முறையோ தரிசிக்க வேண்டும். முடியாத போனாலும், வெளியூரிலிருந்தாலும் அவர் வசிக்கும் திசைநோக்கி நமஸ்கரிக்கவேண்டும்.
8 குருவும் பரமகுருவும் சேர்ந்து வந்தால் முதலில் பரமகுருவை வணங்க வேண்டும். பரமகுருவின் உத்தரவுடன்தான் குருவை வணங்க வேண்டும்.
9 தன் குரு ஜீவதசையில் தான் (சிஷ்யன்) மற்றவருக்கு மந்த்ர உபதேசமோ தீக்ஷையோ செய்தல் கூடாது. (விசேஷ அனுமதியுடன் சிலர் உபதேசம் செய்யும் நிலையும் உண்டு).
10 சரீரம், தனம், ப்ராணன் குருவிற்காகவே காப்பாற்ற வேண்டும்
11 ஸர்வக்ஞரான ஒரே குருவைத்தான் உபாஸிக்க வேண்டும்.
குருப்பர்வாக்கள், பஞ்சபர்வாக்கள் இவற்றில் அவசியம் பூஜை. ஆராதனை செய்தல் வேண்டும்.
<u>குருபர்வா:</u> ஸ்வகுரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு. இவர்களின் ஜன்ம தீக்ஷா, வ்யாப்திதினங்கள்.
<u>பஞ்சபர்வா:</u> பௌர்ணமி, கிருஷ்ணாஷ்டமி, கிருஷ்ணசதுர்த்தசி, அமாவாஸ்யை, மாஸஸங்கரமணம்.
12 குருவாக்யம், சாஸ்திரம் இவற்றில் சிறிது கூட ஸந்தேஹம் வரக்கூடாது, சாஸ்திரத்தில் ஸந்தேஹம் வருமானால் குருவாக்யமே சாஸ்த்ரமாம்.
13 உபாஸகன் பிற மதங்களை ஒருகாலும் தூஷிக்கக்கூடாது.

14 தன்னால் உபாஸிக்கப்படும் தேவதையைத் தவிர மற்றொன்று பெரியது என்று நினைக்கக்கூடாது.

15 எப்போதும் தான் உபாஸிக்கும் தேவதையின் மந்திரத்தை நிதானமாய் ஜபம் செய்து கொண்டே இருக்கவேண்டும்.

16 நித்ய கர்மாக்களை செய்த பிறகே ஸ்ரீவித்யாமந்த்ர ஜபங்கள், பூஜைகள் இவற்றை செய்யவேண்டும்.

17 ஸ்ரீவித்யா ஸம்பந்தமான ஷட்பாராயணங்களையும் செய்து அனுஷ்டானத்தில் வைத்துவரவேண்டும்.

18 நல்ல சிஷ்யனிடத்தில்தான் (உத்தமசிஷ்யன்) மிகவும் ரஹஸ்யமானவற்றைக் கூறவேண்டும்.

19 எப்போதும் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மாச்சர்யம் இவற்றை தள்ள வேண்டும்

20 விதிக்காத ஹிம்ஸை, திருடல், பஹுஜன விரோதம், ஸ்திரீகளை துவேஷிப்பவன், ஸ்திரீகளால் த்வேஷிக்கப்படுபவன் இவற்றை கைவிடவேண்டும்

21 பயனை இச்சிக்காமல் கர்மாக்களை செய்ய வேண்டும்

22 உபாஸனைக்கு விக்னம் செய்பவர்களை சிக்ஷிக்கவேண்டும். தன்னை ஆச்ரயித்தவர்களை அனுக்ரஹிக்கவேண்டும்.

23 எல்லாவற்றிலும் ப்ரமாண வசனங்களை காட்டித்தான் நடந்து கொள்ள வேண்டும்.

24 அனுபவம் வாய்ந்த பெரியோர்களிடத்தில் அசட்டையாக இருத்தல்கூடாது.

25 எல்லாவற்றிக்கும் ஒரு தீர்மானம் வேண்டும். உண்மையே பேச வேண்டும். பரதனத்தில் ஆசை வைக்கக்கூடாது.

26 ஆத்மஸ்துதி, பரநிந்தை, மனம் புண்படும்படியான வாக்கு, கேலி பண்ணுதல், திக்கரம் செய்தல், கத்துதல், பயத்தை உண்டுபண்ணுதல் இவற்றை செய்யக்கூடாது.

27 ஸ்த்ரீகளை திட்டக்கூடாது. திட்டுபவர்களின் சேர்க்கையும் வைத்துக் கொள்ளக்கூடாது. எல்லா ஸ்த்ரீகளையும் தேவிரூபமாக பாவிக்க வேண்டும்.

28 வேதத்தில் விதித்ததான சில கர்மங்களை வைதீகர்கள் எவ்வித பயம் இல்லாமல் அனுஷ்டானம் செய்கிறார்களோ அவ்விதமே உபாஸ்தியில் விதித்தான சில கர்மாக்களை நிர்ப்பயமாக அனுஷ்டானம் செய்ய வேண்டும்.

29 விஹிதமான த்ரவியங்கள் கிடைக்காவிட்டாலும் நித்யமான பூஜையை விடக்கூடாது. மேலும் தன்பலம், வ்யவஹாரம் தேசம், காலம் ஸஹாயம், வயசு இவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டு

விஹிதமான த்ரவியங்களை ஸ்வீகரிக்க வேண்டும்.

30 முக்கியமாக தன் ஆத்மாவை ஸ்வச்சப்ரகாசனாகவே அனுஸந்தானம் செய்யவேண்டும். எப்போதும் சிவோஹம் பாவனையுடன் இருக்கவேண்டும்.

31 எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு பரதேவதையை ஆராதனம் செய்வதன் மூலமாக பூரணஞானரூபமான ப்ரஹ்மபாவத்தை இச்சிக்கவேண்டும்.

அடுத்ததாக

**மிகவும் ஸாரமான தர்மங்கள்**

உபாஸனையே ஹோமம் என்ற நிலை திடப்படவேண்டும்.

1 இந்த்ரிய வ்ருத்திகளால் அறியக்கூடிய எல்லாமே ஹவிஸ்,

2 இந்த்ரியங்கள்தான் ஹோமம் செய்யும் ச்ருக்குகள்.

3 தன்னிடத்தில் ஸங்கோசத்தை அடைந்திருப்பவைகளாயும். ஸர்வக்ஞத்வம், ஸர்வகர்த்ருத்வம் முதலான பரசிவனின் சக்திகள்தான் ஜ்வாலைகள்.

4 தன் ஆத்மஸ்வரூபமாகிற சிவம்தான் அக்னி

5 ஹோமம் செய்வன் தானேதான்

6 இவ்விதம் அனுஷ்டானம் செய்வதின் பலன் என்னவென்றால் நிர்குணமான ப்ரஹ்மத்தை அபரோக்ஷமாக அடைவதுதான். தன் உண்மையான ஸ்வரூப லாபத்தை அடைவதைத் தவிர மற்றொன்றில்லை.

## 6. இவரது பெருமைகள்

1 காஞ்சி பீடாதிபதி ஸ்ரீசந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடமிருந்து – தோடாவும்,

2 ஜகத்குரு ஸ்ரீபூரிசங்கராசாரிய சுவாமிகளிடம் இருந்து "ஸ்ரீவித்யா மார்த்தாண்ட" என்ற வ்ருதையும் பெற்றவர்கள்.

3 த்வாரகா சாரதாபீடாதிபதி ஸ்ரீஅபிநவசச்சிதானந்த தீர்த்தஸ்வாமி அவர்களிடமிருந்து துவாரகா பீடமுள்ள இடமான 'டாக்கோர்' என்ற இடத்தில் 1–3–1971ம் தேதியில் "ஸ்ரீவித்யாவாசஸ்பதி" என்ற வ்ருதையும் பெற்று திகழ்ந்தார்கள்.

4 இப்பால் ஆந்திரப்பிரதேசத்தில் சாஸ்திர விற்பன்னராகவும், தபஸ்வியாயும் மிருந்த புலமையும் உடையவரான எனமன்ற "ஸ்ரீவேணுகோபால்சாஸ்திரிகள்" என்பவர் – இவரை ஸம்ப்ரதாயப்ரவர்த்தகர் எனப் புகழ்ந்து எழுதியுள்ளார். ஸ்ரீகுருநாதர் எழுதியுள்ள

1. ஸ்ரீமஹாகணபதி மந்த்ரமாலா

2.வக்ரதுண்டஷடாக்ஷரி என்றதுதிகளுக்கு இவர் உரையும் எழுதியுள்ளார்

இவைகள் ஸ்ரீவித்யா சாஸ்திரத்தில் இவர்கள் எவ்வாறு சிறந்து விளங்குகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு.